**நலன்புரிகள் நலன்கள் சபை – 2016**

-----------------------------------------------------------------------

நலன்புரிகள் நலன்கள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று அத்திகதியில் முடிவடைந்த இறுதி 6 மாதங்களுக்கான செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 சபையினை தாபித்தல்

2016 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதிய 1952/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் சட்டம் 2016 பெப்ரவரி 13 ஆந் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக சட்டத்தை நிர்வகித்தல் மற்றும் சட்டத்தினால் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த அல்லது கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக கையளிக்கப்படும் நலன்புரி நலன்கள் சபை 2016 யூலை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேலும் சட்டத்தின் 4(அ) பிரிவின் பிரகாரம் நிர்வாக சபையின் தலைவராக நலன்புரி நலன்கள் சபையின் ஆணையாளர் நியமிக்கப்பட்டதுடன் அமைச்சரவையினால் நியமிக்கப்படும் மேலும் நான்கு உறுப்பினர்கள் நிர்வாக சபையின் உறுப்பினர்கள் இருப்பர்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர நலன்புரிகள் நலன்கள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் பிரகாரம் காலப்பகுதிக்குரிய இனங்காணப்பட்ட சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் உள்ளடக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் செலவினங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு செலவினக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நிதியத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்று பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் அச்சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,773,670 ஆன கிரயமான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்கான நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த கட்டுநிதியான ரூபா 899,051 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கட்டுநிதியிலிருந்து செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினம் மூலதன செலவினமொன்றாக சொத்துக்களுக்கு சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கிண்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்புக்களை காண்பிக்கும் பொறுப்புக்கள் கூற்றொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 செயற்பாடும் மீளாய்வும்**

2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நலன்களை பெற்றுக்கொள்பவர்களை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் வெளிப்படையான தன்மையில் தெரிவுசெய்யும் செயற்பாடொன்றை ஏற்படுத்தும் பொருட்டும் அந்நலன்களை முடிவுறுத்துவதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் அது தொடர்பாக அல்லது தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நலன்புரி நலன்கள் சபை தாபிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதில் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(அ) நலன்புரி நலன்கள் சபையின் நிதி மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாட்டுக் கைநூல் தயாரித்தல்

நலன்புரி நலன்கள் சபைக்கென உரித்தான “செயற்பாட்டு கைநூலொன்று தயாரிப்பதற்கு கருத்திற் கொள்ளப்படக்கூடிய காலமொன்று எடுப்பதால் 2016 திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி நடாத்தப்பட்ட நலன்புரி நலன்கள் சபை கூட்டத்தின் போது அரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் கைநூல் நலன்புரி நலன்கள் சபையின் நிதி மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் போது வழிகாட்டலொன்றாக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) நலன்புரி நலன்கள் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானவர்களை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பொருத்தமான நியதிகளுடன் வெளிப்படை தன்மையான தெரிவு செய்யும் செயற்பாடொன்றை ஏற்படுத்தும் பொருட்டு நலன்புரி நலன்கள் நடைமுறையொன்று (Welfare Benefit Scheme) தயாரிப்பதற்காக காணப்படும் நலன்புரி முறைமைகளின் செயற்திறன் தொடர்பாக கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதன் பலவீனங்களை இனங்கண்டு அது தொடர்பாக தந்திரோபாய பத்திரமொன்றை தயாரித்தல்.

நலன்புரி நலன்கள் சபையினதும் சமுக பாதுகாப்பு தள செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களால் சிறிய தெரிவு அடிப்படையில் பேணப்படும் நலன்புரி முறைமையின் செயற்திறன் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன் பின்னர் அவை மிகவும் விரிவான தெரிவு அடிப்படையொன்றின் பேரில் உலக வங்கியால் தமது செலவினால் மேற்கொள்ள வேண்டிய செலவினமொன்றாக மாற்றி அச்செயற்பாடு உலக வங்கியால் பிரய்ஸ் வோட்டார் கூலர் (PwC) நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டதாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.2 நிதிய குறைபாடு

2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய 1952/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் சட்டம் 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்சட்டத்தை செயற்படுத்துவதற்காக 2016 யூலை மாதம் நலன்புரி நலன்கள் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 6,850,560 தொகையும் மூலதன செலவினத்திற்காக ரூபா 400,000 என மொத்தம் ரூபா 7,250,560 தொகை ஊடக அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் குறை நிரப்பு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 899,051 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. சபை தற்காலிக அடிப்படையில் அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்ட காரணத்தினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த நிதிக்கூற்றுக்களை நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டி போதிலும், சபையின் நிதிக்கூற்றுக்கள் 01 வருடமும் 08 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2018 நவம்பர் 09 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.